# வேத்ரவதியை.



வேத்ரவதிதனை ஒருக் கரம்தனில் ஏந்தி,

சூத்ரவதியை மடிதனில் அமர்த்தியவனே - வாழீ !

வேத்ரவதியை......

திருமாலின் வலக்கரம் போன்று என்றுமவர்,

சேனைமுதலியாக திகழும் விஷ்வக்ஸேநரே !

திருமகளிடமிருந்து நான்கு வேதங்களைக்கற்று,

ஏனைய மக்களும் கற்கச்செய்த ஆச்சார்யனே !

வேத்ரவதியை...........

நம்மாழ்வாராக அவதரித்து வேதங்கள் நான்கையும்,

நம்போன்றவரும் நன்குகற்று பயனடையும் வண்ணம் ;

செம்மொழியாம் தூயத் தமிழில் அவற்றை எமகளித்த,

செம்மலே உங்களை நாங்கள் சரணடைகின்றோம் !

வே த்ரவதியை..........